ந.க.எண்.509/2022/இ1

நகராட்சி அலுவலகம்,
கூடலூர்.
நாள்:–10.08.2022

## சாதாரண கூட்ட அழைப்பிதழ்

திருவள்ளுவர் ஆண்டு, சுபகிருது வருடம் ஆடி திங்கள் 27–ஆம் நாள் (ஆகஸ்ட் மாதம் 12–ஆம் (நாள்:–12.08.2022) வெள்ளிக்கிழமையன்று காலை 11.00 மணியளவில் கூடலூர் நகராட்சி நகர்மன்றக்கூட்ட அரங்கில் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் சாதாரணக்கூட்டம் நடைபெற உள்ளது. அது சமயம் அக்கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத்தலைவர்
கூடலூர் நகராட்சி

**பொருள்.1**

ஆணையாளர் அவர்களின் 06/2022 மற்றும் 07/20222 ஆம் மாதந்திர நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.153, பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் 06/2022 மற்றும் 07/2022 ஆம் மாதந்திர நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.154, பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.3**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.**141** , நாள் **08.07.2022** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **14.07.2022** ஆம் நாளன்று உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது..

| வ. எண். | பணியின் பெயர் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலைப்புள்ளியில் வழங்கும்படி கொடுத்துள்ள விலைவிகிதம் |
|---|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சியில் நகர் பகுதியில் உள்ள சுள்ளகரை ஓடையில் மூடியுடன் கூடிய வடிகால் அமைத்திட விரிவான திட்ட மதிப்பீட்டினை தனியார் கலந்தாலோசகர் மூலம் தயார் செய்திடும் பணி | Ayothi Consultancy Kamaraj Nagar Rajapalayam, | மதிப்பீட்டு தொகையில் 0.50% |
| | | Sama Construction & Developments Chennai | மதிப்பீட்டு தொகையில் 0.65% |

அலுவலகக் குறிப்பு : –

1. வரப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையில் 0.50% வழங்கும்படி குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள Ayothi Consultancy, Rajapalayam அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்

2 . மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் முன் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.155,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.4**

கூடலூர் நகராட்சியில் உள்ள எல்.எப்.சாலையில் தற்போது தேசிய நெடுஞ்சாலையினரால் விரிவாக்கப்பணிகள் மேற்கொள்ளபட்டு வருகிறது. மேற்படி சாலையில் இந்து நடுநிலைப்பள்ளியின் அருகில் எல்.எப்.சாலையின் குறுக்கே புதியதாக பைப்பினால் சிறுபாலம் அமைக்க வேண்டிய அவசியம் உள்ளது. சிறுபாலம் அமைப்பதற்கு ரூ.3,00,000/- க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதனை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.156, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.5**

கூடலூர் நகராட்சியில் உள்ள எல்.எப்.சாலையில் தற்போது தேசிய நெடுஞ்சாலையினரால் விரிவாக்கப்பணிகள் மேற்கொள்ளபட்டு வருகிறது. மேற்படி சாலையில் இராஜாங்கம் சிலையின் அருகே எல்.எப்.சாலையின் குறுக்கே புதியதாக பைப்பினால் சிறுபாலம் அமைக்க வேண்டியுள்ளது. சிறுபாலம் அமைக்க ரூ.3,00,000/- க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.157, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.6**

கூடலூர் நகராட்சியில் 15–வது மத்திய நிதிக்குழு மான்யம் **2020-2021 (15th CFC- Tied Grant)** திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 14.07.2022 ஆம் நாளன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கூடலூர் நகராட்சிக்கு ஜே.சி.பி வாகனம் (Excavator Backhoe Loader-3DX PLUS)- 1 எண்ணம் கொள்முதல் செய்தல் | 35.60 |

மேற்காணும் பணிக்கு 14.07.2022 ஆம் நாளன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வலைதளத்தின் வாயிலாக (Online) ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்படவில்லை. மேலும், நேரடியாக (Off line) இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி உறை மட்டும் (Technical Bid) திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்குறிப்பிட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் திட்டப் பணிமேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது.

தொழில் நுட்ப தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமுனா (Price Bid) 15.07.2022 ஆம் நாளன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கோரப்பட்ட விலைவிகித விபரங்கள் கீழ்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/s, JCB India Ltd., Chennai | மதிப்பீட்டு தொகைக்கு (-) 0.43 % குறைவு |
| 2 | M/s, Jeyaraj Automobile Agency, Madurai | மதிப்பீட்டு தொகைக்கு ( –) 0.71 % குறைவு |

**அலுவலகக் குறிப்பு : –** 1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **M/s, Jeyaraj Automobile Agency, Madurai** அவர்கள் **0.71%** சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

2. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.158, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.7

கூடலூர் நகராட்சியில் 15–வது மத்திய நிதிக்குழு மான்யம் **2020-2021 (15th CFC- Tied Grant)** திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள **14.07.2022** ஆம் நாளன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கூடலூர் நகராட்சிக்கு இலகு ரக வாகனம் (Light Commercial Vehicle)- 2 எண்ணம் கொள்முதல் செய்தல் | 16.00 |

மேற்காணும் பணிக்கு **14.07.2022** ஆம் நாளன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வலைதளத்தின் வாயிலாக (Online) ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்படவில்லை. மேலும், நேரடியாக (Off line) இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் வரப்பெற்ற ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில், ஒப்பந்தப்புள்ளிகளில் வரப்பெற்ற விலைவிகித விபரங்கள் கீழ்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/s,A.S.R.Body Works, Madurai | மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2 | M/s, best Engineering, Madurai | மதிப்பீட்டு தொகைக்கு ( –) 2.91 % |

**அலுவலகக் குறிப்பு : –** 1. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **M/s A.S.R.Body Works, Madurai** அவர்களின் ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

2. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.159, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.8

கூடலூர் நகராட்சிக்கு **15-வது மத்திய நிதிக்குழு மான்ய நிதி–2020-2021 (15th CFC Tied Grant)** -ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.**1199** நாள். **25.08.2021** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதி பெறப்பட்டது.

| வ எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சிக்கு 6KL கொள்ளளவு கொண்ட தண்ணீர் டேங்கர் லாரி விநியோகம் செய்தல். | **24.50** |

மேற்கண்ட பணிக்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 21191/2021/CFC நாள்.**16.06.2022.** ன்படி, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு **14.07.2022** ஆம் நாள் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வலைத்தளத்தின் மூலம் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்படவில்லை நேரடியாக கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம்

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/s,A.S.R.Body Works,Madurai | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.98 சதவீதம் அதிகம் |
| 2. | M/s,best Engineering, Madurai | மதிப்பீட்டு தொகைக்கு (+) 5.32 சதவீதம் அதிகம் |

மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் **14.07.2022** அன்று தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி உரை மட்டும் **(Technical Bid)** திறக்கப்பட்டது, மேற்கானும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் **(Tender Scrutiny Committee)** தகுதிகள் சரிபார்க்கும் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டது. இவ்வாய்வின்படி மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே பணிமேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது. இதற்கான விலை ஒப்பந்தப்புள்ளி உரையினை **(Price Bid) 15.07.2022** ஆம் நாளன்று திறக்க இரண்டு ஒப்பந்ததாரர்களுக்கும் அறிவிப்பு வழங்கப்பட்டது. **15.07.2022 -** ஆம் நாளன்று வரபெற்ற இரண்டு ஒப்பந்தாரர்கள் முன்னிலையில் விலை புள்ளி உரை **(price Bid)** திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் சரிபார்க்கப்பட்டதில் மேற்படி பணிக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **4.98%** கூடுதலான விலை விகிதத்தில் **M/s,A.S.R.Body Works,Madurai** அவர்கள் கூடுதலில் குறைவான கூடுதல் விலை விகிதம் கொடுத்துள்ளார். மேற்படி நிறுவனத்தாருக்கு **15.07.2022**ம் நாள் விலை குறைப்பு கேட்பு கடிதம் அனுப்பட்டதின் பெயரில் **M/s,A.S.R.Body Works,Madurai** நிறுவனத்தார் அவர்கள் வேலை ஆட்கள் கூலி உயர்வு, மற்றும் இரும்பு பொருட்கள் விலை உயர்வின் காரணமாக **4.98%** கூடுதலான விலை விகிதத்தில் இருந்து விலை குறைப்பு செய்துதர இயலாது என்று **19.07.2022 ஆம்** நாள் கடிதம் கொடுத்துள்ளார். அதன் விபரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

**சிப்பம் எண் -1**

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/s,A.S.R.Body Works,Madurai | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.98 சதவீதம் அதிகம் |
| 2, | M/s,best Engineering, Madurai | மதிப்பீட்டு தொகைக்கு (+) 5.32 சதவீதம் அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:- 1)** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டும் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலில் குறைவான **4.98%** கூடுதல் விலை விகிதம் வழங்கியுள்ள **M/s,A.S.R.Body Works,Madurai** நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**2)** மேற்கண்ட பணிகளில் மதீப்பிட்டை விட கூடுதலாகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**3)** திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.160, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.9

கூடலூர் நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.143, நாள்.08.07.2022ல் அனுமதிக்கப்பட்டதன்படி இந்நகராட்சி அலுவலகத்தில் அலுவலக பயன்பாட்டிற்கு நிறுவப்பட்டுள்ள பழுதடைந்துள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் பழுதினை சரி செய்யும் பணிக்கு 28.07.2022 ஆம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும்.

| வ.எண். | வேலையின் விபரம் | விலைப்புள்ளி தொகை | |
|---|---|---|---|
| | | திரு.சி.சேரலாதன் | திரு.தெய்வேந்திரன் |
| 1 | கூடலூர் நகராட்சி அலுவலகத்தில் அலுவலக பயன்பாட்டிற்கு நிறுவப்பட்டுள்ள பழுதடைந்துள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் பழுதினை சரி செய்யும் பணி | ரூ.49500/- | ரூ.53350/- |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. வரப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட குறைவாக விலைப்புள்ளி தொகையான ரூ.49,500/-க்கு விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் **திரு.சி.சேரலாதன்** அவர்களின் விலைப்புள்ளியினை அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.161, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.10

கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ஏனைய இடங்கள் விவசாய நிலங்கலாக இருப்பதால், மனையிடத்தின் உரிமையாளர்கள் நகர் ஊரமைப்பு துறையின் அனுமதி ஏதும் பெறாமல் விவசாய நிலங்களை குடியிருப்பு மனைகளாக விற்பனை செய்து வருவதாக பொதுமக்களிடமிருந்து புகார் மனு வருகிறது. எனவே,மேற்படி விவசாய நிலங்களை குடியிருப்பு மனைகளாக மாற்றப்பட்ட நிலங்களின் முன்பு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இரும்பு பதாததைகள் நிறுவுவதற்கு ஆகும் செலவினம் ரூ.35,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி இரும்பு பதாததைகார் நிறுவ உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று பணி மேற்கொள்ள நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.162, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.11

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்பத்தூரில் “Managing and Flourishing in Dual Role” என்ற பயிற்சி 27.07.2022 முதல் 29.07.2022 வரை மூன்று தினங்களுக்கு நடைபெறவுள்ளது. அதில் கலந்து கொள்ளுமாறு பெயர்பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன் பேரில் பயிற்சியில் கலந்து கொள்ள நாள் ஒன்றிற்கு ரூ.1000/– வீதம் மூன்று நாட்களுக்கு (3x1000 = 3000) ரூ.3000/– ஐ இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்பத்தூர் என்ற பெயரில் கேட்பு வரைவோலையாக வழங்கவேண்டியுள்ளதால் உத்தேச செலவினம் ரூ.3000/–க்கு மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

மேற்கண்ட பணியில் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.163, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.12

கூடலூர் நகராட்சிக்கு **கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2022-23**-ன் கீழ் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசு ஆணை **(NS )** எண் - **G.O(MS) No.88** நாள்.**17.06.2022.** ன்படி, கீழ்கண்ட பணிக்கு **ரூ.19.20** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

| வ எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சி வார்டு எண்-5 சர்வே எண்:1455/113 ல் நவீன LPG தகன மேடை அமைத்தல். | **19.20** |

மேற்கண்ட பணிக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசு ஆணை **(NS )** எண் - **G.O(MS) No.88** நாள்.**17.06.2022.** ன்படி நிர்வாக அனுமதியும், மதுரை , நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக மண்டல செயற்பொறியாளர் அவர்களின் செயல்முறை ஆணை **ந.க.எண்.3151/2022/B2 நாள்.20**.06.2022. ன்படி நாள் தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு **29.07.2022** ஆம் நாள் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம்

கீழ்க்கண்டவாறு சிப்பம் எண்-**1**க்கு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் **29.07.2022** அன்று தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி உரை மட்டும் **(Technical Bid)** திறக்கப்பட்டது, மேற்காணும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் **(Tender Scrutiny Committee)** தகுதிகள் சரிபார்க்கும் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டது. இவ்வாய்வின்படி மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே பணிமேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது. இதற்கான விலை ஒப்பந்தப்புள்ளி உரையினை **(Price Bid) 02.08.2022** ஆம் நாளன்று திறக்க இரண்டு ஒப்பந்ததாரர்களுக்கும் அறிவிப்பு வழங்கப்பட்டது. **02.08.2022 -** ஆம் நாளன்று வரபெற்ற இரண்டு ஒப்பந்தாரர்கள் முன்னிலையில் விலை புள்ளி உரை **(price Bid)** திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் சரிபார்க்கப்பட்டதில் மேற்படி பணிக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.23%** குறைவான விலை விகிதத்தில் **M/S SGS Services ,Chennai** நிறுவனத்தார் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். அதன் விபரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

**சிப்பம் எண் -1**

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/S Pearls Engineering Works, Madurai | மதிப்பீட்டு தொகைக்கு (+) 0.32 சதவீதம் அதிகம் |
| 2, | M/S SGS Services ,Chennai | மதிப்பீட்டு தொகைக்கு (+) 0.23 சதவீதம் குறைவு |

**அலுவலகக்குறிப்பு:– 1)** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட **0.23%** குறைவான விலை விகிதம் வழங்கியுள்ள **M/S SGS Services Chennai** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**2)** அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.164, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.13

கூடலூர் நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களின் பயன்பாட்டிற்காக புதிய ஸ்கார்பியோ (Scorpio) வாகனத்தை வாங்கிய நிலையில் மேற்கண்ட வாகனத்திற்கு புதிய பதிவு எண் வட்டார போக்குவரத்து அலுவலகம் உத்தமபாளையம் மூலமாக பெற மேற்கண்ட வாகனத்திற்கு காப்பீட்டு பிரிமியம் தொகை ரூ.51,607/-ஐ யூனைட்டேட் இந்தியா இன்சூரன்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு செலுத்தவும் மேலும் மேற்கண்ட வாகனத்திற்கு வாட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு செலுத்த வேண்டி சாலைவரி மற்றும் இதர வரி செலுத்த ஆகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட செலவினம் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்.165, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.14

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.145, நாள் **.08.07.2022** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான பேப்பர்கள் மற்றும் டோனர்கள் வாங்கும்பணி **27.07.2022** ஆம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருள் விவரம் | M.S.P.Computer & cc Tv, கூடலூர் | Pc Care.system, cc Tv & Laptop,சின்னமனூர் |
|---|---|---|---|
| 1 | A4 பேப்பர் ரிம் (1 எண்ணம்) | ரூ. 230.00 | ரூ. 250.00 |
| 2 | HP டோனர் 12 A (1 எண்ணம்) | ரூ. 430.00 | ரூ. 450.00 |
| 3 | HP டோனர் 88 A (1 எண்ணம்) | ரூ. 480.00 | ரூ. 500.00 |

**அலுவலகக் குறிப்பு :** – 1. வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M.S.P.Computer &ccTv,கூடலூர் என்ற நிறுவனத்தின் விலைப் புள்ளியினை மன்றம் ஏற்க்கலாம்.

2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்.166, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.15

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.147, நாள் **.08.07.2022** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, குப்பை அள்ள பயன்படுத்தப்படும் 10 தள்ளு வண்டி (Push card) பழுதடைந்துள்ளதை சரிசெய்யும் பணி மேற்கொள்ள **25.07.2022** ஆம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1010/2022/எச்.1)

1. ஜெயகண்ணன் தள்ளுவண்டி பட்டறை, கம்பம் – ரூ.8,500/–
2. சந்திரன் தள்ளுவண்டி பட்டறை, கம்பம் – ரூ7,900/–
3. கேசவன் தள்ளுவண்டி பட்டறை, கம்பம் – ரூ8,350/–

**அலுவலகக் குறிப்பு :** – 1.வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள சந்திரன் தள்ளுவண்டி பட்டறை, கம்பம் என்ற நிறுவனத்தின் விலைப் புள்ளியினை மன்றம் ஏற்க்கலாம்.

2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும்,செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண்.167, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.16

கூடலூர் நகராட்சியில் 2021-2022 ஆம் ஆண்டு NULM (SUSV) திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்கு இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள சாலையோர வியாபாரிகளுக்கு தள்ளு வண்டிகள் வழங்கும் பணிகள் குறித்த ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி ஆங்கில நாளிதழில் வெளியிடப்பட்டதற்கான கீழ்கண்டவாறு வரப்பெற்ற பட்டியல் தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண். | பட்டியல் எண் மற்றும் நாள் | நாளிதழ் விபரம் | விளம்பர கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | MDUTAB222300133 நாள்.28.04.2022 | TRINITY MIRROR தினசரி ஆங்கில நாளிதழ் | 15,120/- |
| | மொத்தம் | | ரூ.15,120/- |

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.168, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.17

கூடலூர் நகராட்சியில் கீழ்கண்ட விபரப்படி உள்ள செலவினங்கள் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு-**15**ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் செலவின விபரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| பிரிவு 15ன் பதிவேட்டின் வ.எண் | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | வார்டு எண்-13,தம்மனம்பட்டியில் வசிக்கும் பொதுமக்களுக்கு தினசரி டேங்கர் மூலம் குடிநீர் வழங்குதல். | 403200 |
| 2 | வார்டு எண்-14 தாமரைக்குளம் ரோடு நகராட்சி அலுவலகத்திலிருந்து தாமரைகுளம் வரையிலான சாலையில் இருபுறம் உள்ள குப்பைகள் மாற்றி செடிகளை அப்புறப்படுத்தும் பணி | 118350 |

**அலுவலகக் குறிப்பு.**

மன்றம் பதிவுசெய்யலாம்.

**தீர்மான எண்.169, பதிவு செய்யப்பட்டது.**

பொருள்.18

கூடலூர் நகராட்சிக்கு 15-ஆம் நிதிக்குழு மானியத்திட்டம் 2020-21 ன் கீழ் வாகனம் வாங்குவதற்கு மன்வாரி இயந்திரம் (JCB) ஒன்று சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களின் செயல்முறைகள் .ந.க.எண்.21191/2021/CFC நாள்.30.05.20222 நிர்வாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி தமிழ் நாளிதழில் வெளியிடப்பட்டதற்கான கீழ்கண்டவாறு வரப்பெற்ற பட்டியல் தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண். | பட்டியல் எண் மற்றும் நாள் | நாளிதழ் விபரம் | விளம்பர கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | MDUMAB222300152<br>நாள்.29.04.2022 | மக்கள் குரல் தினசரி தமிழ் நாளிதழ் | 22,176/- |
| | மொத்தம் | | ரூ.22,176/-/- |

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.170, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.19

இந்நகராட்சி பொறியியல் பிரிவின் கீழ் இயங்கி வரும் தெருவிளக்கு பராமரிப்பு (SKY LADER) வாகனம் எண்.TN 60 T8806 ற்கு ஆயுள் காப்பீடு 22.05.2022 உடன் முடிவடைந்ததால், ஆயுள் காப்பீட்டின் அவசியம் கருதி கம்பம் யுனைடெட் இண்டியா இன்சூரன்ஸ் கம்பெனி, லிமிடெட் நிறுவனத்தாருக்கு ஆயுள் காப்பீட்டு தொகை ரூ.20,458/-ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.171, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.20

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.132, நாள் **.08.07.2022** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிக் கொண்டிருக்கும் வண்டி எண்.TN60 AY 4486 என்ற TATA ACE வாகனத்திற்கு புதிய பேட்டரி ஒன்று வாங்கும்பணி **29.07.2022** ஆம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.1011/2022/எச்.1)**

1. S.B.A. BATTERIES, கூடலூர் – ரூ.6,900/–( ஒன்றிற்கு)
2. AMR BATTERIE SHOP, கம்பம் – ரூ7,100/– ( ஒன்றிற்கு)

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள S.B.A. BATTERIES, கூடலூர் என்ற நிறுவனத்தின் விலைப் புள்ளியினை மன்றம் ஏற்க்கலாம்.

**தீர்மான எண்.172, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.21**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.132, நாள் **.08.07.2022** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிக் கொண்டிருக்கும் வண்டி எண்.TN60 AY 4473 என்ற TATA ACE வாகனத்திற்கு புதிய பேட்டரி ஒன்று வாங்கும்பணி **29.07.2022** ஆம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.1011/2022/எச்.1)**

1. S.B.A. BATTERIES, கூடலூர் – ரூ.6,900/–( ஒன்றிற்கு)
2. AMR BATTERIE SHOP, கம்பம் – ரூ7,100/– ( ஒன்றிற்கு)

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளிகொடுத்துள்ள S.B.A. BATTERIES, கூடலூர் என்ற நிறுவனத்தின் விலைப் புள்ளியினை மன்றம் ஏற்க்கலாம்.

**தீர்மான எண்.173, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.22**

கூடலூர் நகராட்சி அலுவலகத்திற்கும் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களுக்கும் தினந்தோறும் செய்தி தாள் விநியோகம் செய்திட ஆண்டு ஒன்றிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/-ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு.</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.174, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.23**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-19ல் கருணாநிதி காலனியில் (இரண்டு) மற்றும் வார்டு எண் -20, காந்தி கிராமம் தெற்கு தெரு (ஒன்று) ஆக மொத்தம் 3 இடங்களில் உள்ள பெண்கள் கழிவறையில் மராமத்து பணிகள் மேற்கொள்ள ரூ.2.50 இலட்சத்திற்கு தயார் செய்யபட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.175, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.24**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கிவரும் வாகனஎண் TN 60 AY 3850 என்ற EICHER வாகனத்திற்க்கு FC தகுதிசான்று 2022–2023 ஆண்டிற்கு பெற வேண்டி கீழ்கண்ட விபரப் படியான பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் மேற்படி வாகனத்தை இயக்க முடியவில்லை அதனால் பொது சுகாதார பணிகள் பாதிப்பதுடன் , திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்வதில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது எனவே கீழ்கண்ட விபரப் படியான பழுதுகளை சரி செய்ய ஆகும் உத்தேச செவவினம் ரூ.1.44,000/– ற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

| | |
|---|---|
| 1 | நான்கு வில்களிலும் சைடுகட் அடித்து ஒருசைடு 2 பிளேட் வீதம் 4 சைடுக்கு 8 பிளேட் புதியது மாற்றுதல். |
| 2 | பிரேக் ஜயனிங சிலிண்டர் சீட்,மாஸ்டர் சிலிண்டர் ஆகியவைகளை புதியது மாற்றுதல் |
| 3 | டயனமே பாயிண்டு செட்,பிரஸ் செட் புதியது மாற்ற |
| 4 | செல்ப் மோட்டார் பிரஸ் செட் புதியது மாற்றுதல், |
| 5 | சிஙபின் சுழட்டி கிளின் செய்து புஸ்,பேரிங புதியது மாற்றுதல். |
| 6 | ஹெட்டாலிக் டிப்பிங ஜாக்கி வாசர் செட்டுகள் புதியது மாறறுதல் |
| 7 | டிப்பிங ஆயில் மாற்றுதல், |
| 8 | பேட்டரி புதியது மாற்றுதல் |
| 9 | டிப்பிங குட்டி ஜாய்ண்டு பெண்டு எடுத்து செயின் லைப்புகள்,பிளாட்பாரம் ஆஙகில் வெல்டிங செய்ய |
| 10 | ஸ்டோரிங பாக்ஸ் பால் ஜாய்ண்டு மாற்றவும் |
| 11 | ஜாக்கி பெண்டு எடுத்து செயின் லைப்புகள்,பிளாட்பாரம் ஆஙகில் வெல்டிங செய்யவும் |
| 12 | ஹெட்டாலிக் ஆயில் 25 லிட்டர் மாற்ற |

| | |
|---|---|
| 13 | சீட்டுகள் கிராங,வெல்டிங செய்து ஸ்பாஞ் வைத்து புதிய கவர் மாற்ற |
| 14 | ஏர் கம்பரசர் சீட் புதியது மாற்ற |
| 15 | ஆரன் செக்கப்,வயரிங‌செக்கப்,பல்பு கிளாஸ் புதியது மாற்ற |
| 16 | வாட்டர் சர்வீஸ்,கிரீஸ்,பெயிண்டிங மற்றும் FC தகுதி சான்று பெற ஒளிரும் பட்டைகளை ஒட்டிதருதல் |

**அலுவலகக் குறிப்பு : –** 1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் (ம) மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள தீர்மானிக்கலாம் (ந.க.எண்.1139/2022/எச்1)

**தீர்மான எண்.176, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.25**

கூடலூர் நகராட்சியில் 2021-2022ம் ஆண்டிற்குரிய வருமான வரி ,சரக்கு மற்றும் சேவைவரி ஆகியவை E-Filling செய்தமைக்குரிய பட்டியல் தொகை ரூ.22,000/- மற்றும் 18,500/-ஆக மொத்தம் ரூ.40,500/-ஐ ஆலயம் அசோசியேட்ஸ் திரு.எஸ்.ராமநாதன் அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு.</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.177, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.26**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தேனி மாவட்டத்திற்கு 30.04.2022 ஆம் நாளன்று வருகை புரிவதை முன்னிட்டு விழா நடைபெறுவதற்குரிய விளம்பரத்தினை தினசரி நாளிதழ்களில் வெளியிட்டதற்க கீழ்கண்டவாறு வரப்பெற்ற பட்டியல் தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்.** | **பட்டியல் எண் மற்றும் நாள்** | **நாளிதழ் விபரம்** | **விளம்பர கட்டணம் (ரூபாயில்)** |
|---|---|---|---|
| 1. | 373 நாள் 30.04.2022 | தின குரல் தேசிய நடுநிலை நாளிதழ் | 48,000/- |

**<u>அலுவலக குறிப்பு.</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.178, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.27**

கூடலூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணியினை மேற்கொள்ளும் பொருட்டு வீடு தேரும் BOV மற்றும் தள்ளுவண்டி வைத்து மக்கும், மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்குவதற்க்கு தேவையான டிரம் 200 எண்ணம் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,50,000/– மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு : –**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.179, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.28**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.148, நாள் **.08.07.2022** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, நகராட்சி பொது சுகாதார பிரிவில் டெங்கு தடுப்பு நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படும் புகைமருந்து அடிக்கும் இயந்திரமான Mini Fogging Machine – **3** எண்ணம் மற்றும் Pulse Fogging Machine–**1** எண்ணம் வாங்கி வாங்கும்பணி **02.08.2022** ஆம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருள் விவரம் | M.Surali Contracter, Gudalur | S.Thanabal Contracter, Dindigul | S.Prakash Contracter, Gudalur |
|---|---|---|---|---|
| 1 | Mini Fogging Machine – 1Nos | ரூ.35,000 | ரூ.38,000 | ரூ.37,000 |
| 2 | Thermal Fogging Machine – 1Nos | ரூ.88,000 | ரூ.90,000 | ரூ.91,000 |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடு M.SURALI CONTRACTER கூடலூர் என்ற நிறுவனத்தின் விலைப் புள்ளியினை மன்றம் ஏற்க்கலாம்.

**தீர்மான எண்.180, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.29**

கூடலூர் நகராட்சி, கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.147 நாள் **.08.07.2022** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, குப்பை அள்ள பயன்படுத்தப்படும் 5 எண்ணம் BOV வாகனத்தின் பழுதடைந்துள்ளதை சரிசெய்யும் பணி மேற்கொள்ள **02.08.2022** ஆம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொருள் விவரம் | M.Surali Contracter, Gudalur | S.Thanabal Contracter,Dindigul | S.Prakash Contracter, Gudalur |
|---|---|---|---|---|
| 1 | BOV வாகனத்தின் பழுதடைந்துள்ளதை சரிசெய்யும் பணி ( வாகனம் ஒன்றிற்க்கு) | ரூ.63,000 | ரூ.67,000 | ரூ.69,000 |

**<u>அலுவலகக் குறிப்பு :</u> –**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்த M.Surali Contracter, கூடலூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்க்கலாம்.

**தீர்மான எண்.181, அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்/-)லோ.பத்மாவதி**
**நகர்மன்றத்தலைவர்**
**கூடலூர் நகராட்சி**